1998 மே 5]

அமைக்கப்பட்ட இரண்டு மிகப் பெரிய டிரான்ஸ்பார்மர்கள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன். அதன் காரணமாக, தருமபுரி மாவட்டம் முழுவதிலும் மின் தடை ஏற்பட்டு விடுகிறது. அங்கு ஒரு புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தால், மிகவும் நல்லமுறையில் இருக்கும். ஆகவே, தயவுகூர்ந்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான உடனடி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 'டிரான்ஸ்பார்மரால்' ஏற்பட்ட கோளாறு அல்ல. சப்-ஸ்டேஷனில் ஏற்பட்ட கோளாறு. தருமபுரியிலே, பொதுவாக மின்னழுத்தம் காரணமாக, அடிக்கடி இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன. இதை அரசு உணர்ந்து, தருமபுரி மாவட்டத்திலே அரூர், பெண்ணாகரம், தருமபுரி ஆகிய இடங்களிலே *33/11* கி.வோல்ட் துணை மின் நிலையத்தை *110/11* கி.வோல்ட் துணை மின் நிலையமாக மாற்றுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதுபோல, பெரும்பாலை, நெருப்பூர், புதுப்பட்டி, தைத்தான், பேரிகை, காரப்பட்டு, மஞ்சவாடி, ஈச்சம்பாடி ஆகிய இடங்களில் *33/11* கி. வோல்ட் துணை மின் நிலையங்களை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

முற்பகல் *9-35*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தருமபுரியா? (குறுக்கீடு) வாய்ப்பு கிடையாது.

வினா எண் *425*, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

425—

மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைத்தல்

***6816—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகருக்கான இரண்டாவது மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1998 மே 5

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது செயலாக்கத்தில் உள்ளது.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே திருத்தணி குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 கோடியே 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, திருத்தணி நகருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதற்காக என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், நிதியொதுக்கப்பட்டு ஓராண்டு நிறைவுற்ற நிலையில்கூட, இன்னும் தொடக்கப் பணிகள் துவங்கப்படாமலேயே இருக்கின்றன. அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கோடியே 10 இலட்சம் ரூபாயில் அந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு, வருடச் செலவுக்காக 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், அதுபோலவே, அதற்குள் அடங்கிய பல திட்டங்களுக்கும் அரசு நிதி வழங்கியுள்ளது. நீராதாரத்தைக் கண்டுபிடிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இரண்டு மூன்று இடங்களில் பார்த்து, இப்போது 4 நீர் உறிஞ்சிக் கிணறுகள் குசஸ்தலை ஆற்றில் அமைப்பதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளது. விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டில் அவைகளை முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 426, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

426—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

***8682—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மைலம் ஒன்றியத்திலுள்ள நெடி, மோழியனூர் கிராமத்தில் நெடி என்கிற கிராமப் பகுதிக்கும், மோழியனூர் என்கிற